கலாபூஷணம்
பீ.எம்.புன்னியாமீன்




# நூல் தேட்டம்:

## இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்கவேண்டியதொரு பெருநதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்தேட்டம்:

## இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி

(ஆய்வு)

-கலாபூஷணம் புன்னியாமீன்-

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள்
(தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
தொலைபேசி 0094-81-2493746
தொலைநகல் 0094-81-2497246

'சிந்தனை வட்டத்தின் 242வது வெளியீடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி

ஆசிரியர் : பீ.எம். புன்னியாமீன்
பதிப்பு : 1ம் பதிப்பு - பெப்ரவரி 2007
வெளியீடு : **சிந்தனை வட்டம்.**
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப் பதிப்பு: எஸ்.எம். ரமீஸ்தீன்
முகப்பட்டை : எஸ். கௌதமன் (ஐக்கிய இராச்சியம்)
ISBN : 978-955-8913-68-0
பக்கங்கள் : 54
விலை : 70/-

**Noolthettam: Ilankaiyin Thesiya Ilakkiya Neerottaththil Sangamikka Wendiyathoru Peru Nathi.**

Noolthettam: A large stream that joins the river of Sri Lankan national Literature.

Author : P.M. Puniyameen.
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition February 2007
Language : Tamil
Type Setting : S.M. Rameezdeen
Cover Designing : S. Gauthaman (UK) treklord @hotmail.com
ISBN : 978-955-8913-68-0
Pages : 54
Price : 70/-

**© P.M. Puniyameen, 2007**
All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# என்னுரையும், பதிப்புரையும்



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல எழுத்தாளரும், முத்த நூலகவியலாளரும், பன்னூ லாசிரியருமான திரு. என். செல்வராஜா அவர்கள் புலம்பெயர்ந்து தனது குடும்பத்துடன் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருகின்றார். ஈழத்தவர்களின் தமிழ்மொழி நூல்களின் விபரங்களைத் திரட்டி, அவை பற்றிய குறிப்புக்களைப் பதிவாக்கி; நாளைய சந்ததியினருக்கு விட்டுச் செல்ல வேண்டும் என்ற உயர் இலட்சியப் பயணத்தின் வெளிப்பாடாக அவர் இதுவரை 4000 ஈழத் தமிழ்மொழி நூல்களின் பதிவினை 'நூல் தேட்டம்' எனும் மகுடத்தில், நான்கு தொகுதிகளாக தனது அயோத்தி நூலக சேவையினூடாக வெளியிட்டுள்ளார்.

**'நூல் தேட்டம் – ஒரு வரலாற்று ஆவணக்களஞ்சியம்'.** எனவே இந்த நூல்தேட்டத்தின் நான்கு தொகுதிகளையும் ஆய்வுக்குட்படுத்தி என்னால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரை: கனடாவிலிருந்து வெளிவரும் 'விளம்பரம்' பத்திரிகையில் 2006 ஆகஸ்ட் 15, 2006 செப்டெம்பர் 01 ஆகிய இதழ்களிலும், இலங்கையில் 'ஞானம்' சஞ்சிகையில் 2006 செப்டெம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய இதழ்களிலும் தொடராகப் பிரசுரமானது.

இக்கட்டுரை பிரசுரமானதையடுத்து தமிழ்மொழியினை சிறப்புக்கற்கையாகக் கற்கும் சில பல்கலைக்கழக மாணவர்களும், சில ஆய்வாளர்களும் என் கட்டுரையின் மூலப் பிரதியைக் கோரியும், திருவாளர் என். செல்வராஜா அவர்களின் விபரங்களைக் கோரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் தொடர்பு கொண்டனர். இதனையடிப்படையாகக் கொண்டே **'நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி'** எனும் அவ்வாய்வுக் கட்டுரையை நூலுருவாக்கி வெளியிட முடிவெடுத்தேன்.

இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் ஒன்றான நவமணியில் என்னால் எழுதப்பட்டுவரும் 'ஈழத்து புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' கட்டுரைத் தொடரில் திரு. என். செல்வராஜா அவர்கள் பற்றிய குறிப்புக்கள் 2006.01.01 இதழில் இடம்பெற்றிருந்தது. (அக்குறிப்பு என்னுடைய இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு: தொகுதி - 4 இல் 115வது பதிவாகவும் பதிவாக்கப்பட்டுள்ளது.) அக்குறிப்பினையும் இந்நூலில் இணைத்துள்ளேன்.

'நூல்தேட்டம் - இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி' எனும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் சிந்தனைவட்டத்தின் 242வது வெளியீடாகும். சிந்தனைவட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு வாசக நெஞ்சங்களான நீங்கள் தந்த ஆதரவு இந்நூலுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன்.

மிக்கநன்றி.
அன்புடன்
உங்கள்

**~கலாபூஷணம் புன்னியாமீன்~**
முகாமைத்துவப் பணிப்பாளர்

**வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'**
**வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி**
14-உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
2007.02.15

# நூல்தேட்டம்:
# இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி

இனங்களுக்கிடையிலே ஒற்றுமை, புரிந்துணர்வு, பரஸ்பர நல்லிணக்கம் ஆகிய எண்ணக்கருக்கள் எழுத்துகளிலும், மேடைப் பேச்சுகளிலும், இலத்திரனியலூடகப் பேட்டிகளிலும், பெரிதாக பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் 'இலங்கையின் தேசிய இலக்கியம்' என்ற விசாலமான கருப்பொருள் பற்றிச் சிந்திக்க வேண்டியதன் அவசியம் இன்றைய காலத்தின் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

இலங்கையின் தேசிய இலக்கியப்பரப்பில் எழுத்துத்துறை வளர்ச்சிக்கான இலங்கை வாழ்சிறுபான்மைச் சமூகத்தினரின் பங்களிப்பு விசாலமானதாகும். 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து இத்தகைய பங்களிப்பு முனைப்புடன் இடம்பெறலாயிற்று.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்துச் சிறுபான்மையினரின் தமிழிலக்கியப் பாங்கினை ஆராயும் போது விசேடமாக மூன்று பிரதான விடயங்களின் உள்ளடக்கத்தினை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமயக் கருத்துக்களை மையமாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.
- சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.
- தேசிய உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவங்கள்.

இங்கு சமயக் கருத்துக்களை மையமாகக் கொண்ட இலக்கியங்கள் எனும்போது பிரித்தானியரால் திணிக்கப்பட்டு வந்த மிஷனரி முறைக்கெதிராகத் தத்தமது சமயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி, தத்தமது சமயத்தினை முதன்மைப்படுத்தி, முக்கியப்படுத்தும் வகையிலான இலக்கிய வடிவங்களை இனங்காட்டலாம்.

சமூக சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் எனும் போது மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்நிய நாட்டுக் கலாசாரத் தாக்கங்களினால் சீரழிவுகளை எதிர்நோக்கி வந்த தத்தமது சமூகத்தினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி தத்தமது சமூகத்தினரின் கலாசார முக்கியத்துவங்களையும், சமூக மரபுகளையும், விழுமியங்களையும் முதன்மைப்படுத்துவதனூடாக சமூகத்தினரின் கல்வி, பொருளாதார, கலாசார எழுச்சியினைத் தூண் டத்தக்க இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

அதே போல தேசிய உணர்வுகளின் வெளிப்பாடு எனும் போது அடிமைத்துவ ஆட்சி முறையிலிருந்து எமது தேசம் விடுதலை யாக வேண்டும் என்ற சுதந்திர வேட்கையின் வெளிப்பாடான இலக்கி யங்களைச் சுட்டிக் காட்டலாம். மேற்குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களால் முன்வைக்கப்பட்ட இலக்கிய வடிவங் களில் மாத்திரமல்ல பெரும்பான்மைச் சமூகத்தினரின் சிங்கள இலக் கியங்களிலும், முச்சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட ஆங்கில இலக் கியங்களிலும் காணமுடியும். ஆனால், இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினரின் தமிழ் இலக்கியங்கள் பற்றிய பதிவுகள் முறையாக பேணப்படாமையினாலும், அவை ஆவணப்படுத்தப்படாமையினாலும்



இலங்கை தேசிய இலக்கியப் பரப்பில் தமிழ் மொழிமூல இலக்கியப் படைப்புக்களினதும், படைப்பாளிகளினதும் பரிமாணம் மதிப்பீடு செய்யப் படாமலே மறைந்து போய்விடுகின்றது.

மேற்கத்திய இலக்கியங்கள், மேற்கத்திய இலக்கியவாதிகளைக் கூட எடுகோளுக்காக உள்வாங்கும் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ் இலக்கியங்கள், தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய ஆய்வுகள் உள்வாங்கப்படாமலிருக்கின்றன என்றால் உரிய பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமலிருப்பதும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி இலக்கியங் கள் மீது ஆர்வம் காட்டப்படாமலிருப்பது, இனங்களுக்கிடையே நல்லி ணக்கம், நல்லுறவு என்ற கதையாடல்களில் ஈடுபடும் இக்காலகட்டத் திற்குப் பொருத்தமானதொரு விடயம் எனக்கூறிவிட முடியாது. நல்லி ணக்கம், நல்லுறவு எனும் வார்த்தைப் பதங்கள் வெளிவாரியானதல்ல. உள்ளார்ந்த உணர்வுகளுடன் சங்கமித்து உள்ளார்ந்த சிந்தனைகள் பரிமாறப்படும் போதே அப்பதங்களின் அழுத்தம் யதார்த்தம் பெறக் கூடியதாக இருக்கும். இத்தகைய உள்ளார்த்தமான சிந்தனைகளை அறிந்து கொள்ள 'இலக்கியங்கள்' ஆணிவேரானவை என்றால் மிகை யாகாது.

தேசிய இலக்கிய நிலைபற்றிய எண்ணக்கருவினை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழ் இலக்கியப்பரப்பினை நோக்கின் தமிழ் இலக்கியத் துக்குள்ளும் நாமே உருவாக்கிக் கொண்ட பிரதேச ரீதியான இலக்கி யம், இனரீதியான இலக்கியம், சார்பு ரீதியான இலக்கியம் என்பன 'தமிழ்மொழி' எனும்போதான உணர்வினைமீறி சுயநலமிக்க - குறுகிய போக்குமிக்கதாக மாறிவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகைய நிலைப்பாடுகள் விஸ்வரூபமாக அமைவதினால் தமிழ் இலக்கியத்தில் கடந்த கால கட்டங்களில் சாதிக்கப்பட்டவை யாவை? சாதித்தவர்கள் யார்? முன்வைக்கப்பட்ட உணர்வுகள் யாவை? அவற்றின் பின்னணிகள் யாவை? என்பன புதிய தலைமுறையின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன.

எனவே, ஈழத்துத்தமிழ் இலக்கியத்தினை எந்தவித பாகுபாடுமின்றி ஒருமுகப்படுத்த வேண்டியதும், அவற்றின் பதிவுகளைத் திரட்ட வேண்டியதும், அவற்றினை ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகிவிட்டது. ஏனெனில், தேசிய இலக்கிய நீரோட்டத்தில் எமது தமிழ் இலக்கியங்களின் விபரங்களையும் இணைக்க வேண்டுமானால் முதலில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக ஈழத்தில் வெளிவந்த தமிழ்நூல்கள் பற்றியும், நூலாசிரியர்கள் பற்றியும் பொதுவான பதிவுகளை மேற்கொண்டு அவற்றை ஆவணப்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

குறிப்பாக - இலங்கையில் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், சிறந்த நிர்வாகசேவை உத்தியோகத்தரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூற்பதிவுகளை 'சுவடி ஆற்றுப் படை' எனும் தலைப்பில் நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

1994ம் ஆண்டில் வெளிவந்த 'சுவடி ஆற்றுப்படை' முதலாம் தொகுதியில் 1850 - 1949 காலப்பகுதியில் ஒரு நூற்றாண்டு காலத்து 198 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1995ம் ஆண்டில் வெளிவந்த இரண்டாம் தொகுதியில் 1950 -1969 காலப்பகுதியில் இரண்டு தசாப்தகாலத்து 355 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1997 இல் வெளிவந்த மூன்றாம் தொகுதியில் 1970 - 1995 காலப்பகுதியில் வெளிவந்த 924 நூல்கள் பற்றிய தகவல்களையும், 2001ம் ஆண்டில் வெளிவந்த நான்காம் தொகுதியில் 1996 - 2000 காலப்பகுதியில் வெளிவந்த 500 நூல்கள் பற்றிய தகவல்களையும் பதிவாக்கி ஆவணப் படுத்தியுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை 'சுவடி ஆற்றுப்படை' நான்கு தொகுதிகளிலும் கண்டுகொள்ள முடியும். 1850 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் 1977 நூல்கள் பற்றிய விபரங்கள்



எஸ்.எச்.எம். ஜெமீலின் 'சுவடி ஆற்றுப்படை'யில் பதிவாகியுள்ளன. இலக்கியப் பதிவு, இலக்கிய ஆவணப்படுத்தலில் இது ஒரு முக்கிய கட்டமாகும்.

இதே பணியினை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வசித்துவரும் திருவாளர் என். செல்வராஜா அவர்களும் 21ம் நூற்றாண்டில் மேற்கொண்டு வருகின்றார். 'சுவடி ஆற்றுப்படை' இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரமே ஆவணப்படுத்தியது. ஆனால், என்.செல்வராஜா அவர்களுடைய 'நூல்தேட்டம்' ஓர் இனத்த வரை மாத்திரம் மையப்படுத்தாமல் தமிழ் எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள், புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள் என்ற அடிப்ப டையில் தமிழ்மொழி மூலமாக இலங்கையர்களால் எழுதப்பட்ட அனைத்து நூல்களையும் ஆவணப்படுத்த முயன்றுள்ளது.

நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய பணியி னை தனியொருவரால் மேற்கொள்ள முடியும் என்பதை செயலில் காட்டி சாதனை படைத்துவரும் மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியரும், பிரபல எழுத்தாளரும், வானொலி, மேடைப் பேச்சாளரும், ஆய்வாளருமான திருவாளர் என்.செல்வராஜா அவர்கள் ஈழத்தவர்களின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990 இல் ஆரம்பித்து 2006 வரை 'நூல்தேட்டம்' எனும் பெயரில் நான்கு தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் நூல்கள் என்ற அடிப்படையில் நாலாயிரம் நூல்கள் பற்றிய விபரங்களை இதுவரை பதிவாக்கியுள்ளார். நூல்தேட்டம் முதலாம் தொகுதியில் நூலாசிரியர் என்.செல்வராஜா பின்வருமாறு தனது முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.

**''... நூல்கள் ஓர் இனத்தின் பண்பாட்டை, கலாசார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவு எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலை முறைக்கும், அடுத்துவரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன. அத்தகைய ஒரு வரலாற்றுப் பதிவை, ஈழத்தமிழ்த் தேசியத்தின் அறிவுத்தேட்டத்தின் கனதியை பதிவாக்கமுனையும் முடிவில்லாத வொரு நீண்ட பயணத்திற்கான முதற் காலடித்தடம் இங்கே பதியப் பெறுகின்றது.'

உண்மையிலே இது ஒரு விசாலமான பணியாகும். இதனை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை வரையறை செய்வதனூடாகவோ அன்றேல் சில தொகுதிகளை வெளியிட்டு விடுவதனூடாகவோ மாத்திரம் நிறைவேற்றிவிட முடியாது. இதனால் தான் என்.செல்வராஜா அவர்கள் 'முடிவில்லாதவொரு நீண்ட பயணமாக'. இதனை வர்ணித் துள்ளார்.

தேசிய நூல்விபரப்பட்டியல் முயற்சியென்பது இலங்கைக்குப் புதிய விடயமொன்றல்ல. இலங்கையில் 'அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்' 1885 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976ம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படி இலங்கையில் அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காக தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படும் நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கைத் தேசிய நூலகம் ஆகியவற்றுக்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

1885ம் ஆண்டில் 'அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தின்' கீழ் (179 வது அத்தியாயம்) இலங்கையில் அச்சிடப்படும் நூல்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு காலாண்டுக்கொருமுறை வர்த்தமானியின் ஐந்தாவது பிரிவாக வெளியிடப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. 1949 இல் இலங்கை 'யுனெஸ்கோ' அமைப்பின் அங்கத்துவ நாடாகிய பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூற்பட்டியலின் தேவை வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக 1952 இல் இலங்கைத் தேசிய நூல் விபரப்பட்டியலுக்கான உப ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய நூற்பட்டியல் தொகுப்பின் முதலாவது இதழ் 1962 இல் வெளிவந்தது. 1970 ம் ஆண்டில் 17ம்



இலக்க சட்ட மூலத்தின் பிரகாரம் 'இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை' ஸ்தாபிக்கப்பட்டதையடுத்து தேசிய நூற்பட்டியல் இச்சபையினாலேயே வெளியிடப்பட்டது. பின்பு 1998ம் ஆண்டில் 1986ம் ஆண்டிலிருந்து இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு ISBN இலக்கம் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ISBN இலக்கத்தை வழங்கி வருவதும் இந்த தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையேயாகும். இச்சபையானது இலங்கையில் தேசிய நூற்பட்டியலை தயாரிக்கும்போது அச்சகங்களினால் தேசிய ஆவணக் காப்பகத்துக்கு அனுப்பப்பட்டு ஆவணக்காப்பகத்தினால் கிடைக்கும் நூல்களையும், நேரடியாக தனது சபையிடம் ISBN இலக்கத்தைப் பெற்று அச்சிடப்படும் நூல்களையும் சேர்த்துக் கொள்கின்றது. ஆரம்ப காலகட்டங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்பட்ட தேசிய நூற்பட்டியல் தற்போது மாதம் தோறும் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தேசிய நூற்பட்டியலில் மொழி வேறுபாடின்றி மும்மொழி நூல்களுக்கும் கொள்கையளவில் இடம் ஒதுக்கப்பட்ட போதிலும்கூட தமிழ் நூற்பிரிவில் ஒரு சில நூல்களே இடம்பெற்று வருகின்றன. இதற்கான காரணம்,

1. தமிழ் நூல்களை அச்சிடும் அச்சகங்கள் அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தினை மதித்து அச்சிடும் நூல்களின் பிரதிகளை தேசிய நூலகத்திற்கு அனுப்பி வைக்காமை.

2. தமிழ்மூல எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் ISBN இலக்கத் தைப் பெற்றுக்கொள்வதில் கரிசனை காட்டாமை.

3. நூற்பட்டியலைத் தயாரிக்கும் தேசிய நூலகத்தில் தமிழ் நூல்களைப் பட்டியலிடக் கூடிய ஆட்பலம் விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றமை.

எவ்வாறாயினும் இதனால் பாதிப்படையப் போவது தமிழ் மொழிமூல எழுத்தாளர்கள் தான் என்றால் பிழையாகாது. ஏனெனில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழிமூல நூல்கள் எதுவிதமான பதிவுகளுக்கும், ஆவணப்படுத்தல்களுக்கும் உட்படாமல் அம்முயற்சிகளும், கருத்துக்களும் வெளிவந்த சுவடின்றியே மறைந்து போய்விடுகின்றன. இதனால் சமகாலத்தில் வாழ்பவர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் இம்முயற்சிகள் பற்றித் தெரியாமல் போய்விட இடமுண்டு.

1980 களின் பின்னர் தமிழ் நூல்கள் மற்றுமொரு பிரச்சினையையும் எதிர் நோக்குகின்றன. அதாவது 1980களின் பின்னர் பெருந்தொகையான தமிழ் எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இத்தகையோரால் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், இவர்களின் தமிழ் மொழிமூல நூற்கள் பற்றிய பதிவுகள் சரியான முறையில் மேற்கொள்ள வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றன. அண்மைக்காலமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்களினால் பிற நாடுகளில் வெளியிடப்படும் நூல்களையும் பதிவுக்கு உட்படுத்தும் புதிய பகுதியொன்றை ஆரம்பித்த போதிலும்கூட, நடைமுறையில் இது போதிய சாத்தியப்பாட்டினை வெளிப்படுத்தவில்லை.

எனவே, ஈழத்துத் தமிழ்மொழி நூல்களின் பதிவு என்பது காலத்தின் அவசியத் தேவையாகும், அதே போல அவசரத் தேவையுமாகும். இந்நிலையை நன்கு உணர்ந்திருந்த, தமிழ் இலக்கியப் பதிவுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர் இலட்சியத்தைக் கொண்ட சிரேஷ்ட நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் சுமார் 5000 ஸ்ரேலின் பவுண்களை தனது சொந்தப் பணத்தில் செலவிட்டு இதுவரை எழுதி வெளியிட்டுள்ள நான்கு தொகுதிகள் பற்றியும் சுருக்கமாக அவதானிப்போம்.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான நூல் விபரப்பட்டியலான நூல்தேட்டம் முதலாவது தொகுதியின் முதற் பதிப்பு 2002 ஜுன் மாதத்தில் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் ஐக்கிய



இராச்சியக் கிளையினால் இலண்டன் வாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 356 பக்கங்களைக்கொண்டு வெளிவந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-0-3. விலை இலங்கையில் ரூபாய் 600.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

நூல்தேட்டம் தொகுதி 2 இன் முதலாம் பதிப்பு 2004 ஜுன் மாதத்தில் அயோத்தி நூலக சேவைகள் வெளியீடாக கொழும்பு ரெக்னோ பிரிண்ட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 484 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-1-1. விலை இலங்கையில் ரூபாய் 600.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

நூல்தேட்டம் தொகுதி 3 முதலாம் பதிப்பு 2005 ஆகஸ்ட் மாதத்தில் அயோத்தி நூலக சேவைகள் வெளியீடாக கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 546 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-2-x. விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10, ஆகும்.

நூல்தேட்டம் தொகுதி 4 முதலாம் பதிப்பு 2006 செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சிய, அயோத்தி நூலக சேவைகள் வெளியீடாக கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தற்போது வெளிவந்துள்ளது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-3-8 விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

திரு என்.செல்வராஜா அவர்களின் நூல்தேட்டம் தொகுப்பிற்கான சர்வதேச தராதர நூற்றொடர் இலக்கம், International Standard Serial Number (ISSN) 1477-4690 என்பதாகும்.

என். செல்வராஜா அவர்களுடைய மேற்படி நான்கு தொகுதிகளிலும் ஒரு தொகுதியில் ஆயிரம் ஈழத்தவர்களின் தமிழ்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமான நூல்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக நாலாயிரம் நூல்கள் பதிவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய பதிவுகள் அனைத்தும் நூலியல், தகவல் விஞ்ஞானமுறைக்கு அமைய துறைசார் அறிவியல் பின்புலத்துடன் பதிவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தனி ஆவணமாகக் கருதும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்பிதழ்களும், சில தனித்துவமான கல்வெட்டுக்க ளும், தனிநூலின் வகைக்குள் அடங்கக் கூடிய கனதியான அம்சங்க ளுடன் வெளிவந்த ஞாபகார்த்த மலர்களும் இத்தொகுதிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதேநேரத்தில் இந்த நான்கு தொகுதிகளிலும் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரை யறை செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் உசாத்துணை நூல் என்ற பிரிவுக்குள்ளடங்கும் நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய காலத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் ஒவ்வொரு தொகுதியும் மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடர் எண் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத் தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைய முடியும்.இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாட வாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகர வரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகர வரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகர வரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கில் அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.



ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும், இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் ஒரு பெயரின் கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர் எண்களைக் குறிக்க நூலாசிரியர் முனைந்துள்ளார்.

### நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம் ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற் பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் (அறியமுடிந்தவை) தரப்பட் டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டா ளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும் போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியா கக் காட்டப்பட்டுள்ளது. நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. நூலின் அச்சக விபரம் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கு சிறப்பம்சங்கள் எனும்போது வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாகத் தரப்பட்டிருப்பது நூலின் அளவாகும். இது சென்றி மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) ஆகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. (எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று நூல்தேட்டம் முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் புத்தக வெளியீட்டாளர்களும், எழுத்தாளர்களும் கட்டாயமாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டிய கட்டுரை இது. ஏனெனில், இலங்கையில் வெளியிடப்படும் தமிழ் நூல்கள் சர்வதேச தரத்தை அடைய உதவும் முதற்படி ISBN இலக்கம் பெறுவதே என்பதினால் இத்தகைய விளக்கம் கட்டாயத் தேவையாகும்.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது சிறு அறிமுகமாக மாத்திரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்த அறிமுகத்தின் மூலமாக நூலின் உள்ளடக்கத்தை இலகுவாக இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் ஆங்காங்கே எழுத்தாளர் பற்றியதும் குறிப்பிட்ட நூல் பற்றியதுமான பின்னணித்தகவல்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.



**பகுப்பாக்கம்**

இந்நூல்களின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தெற்காசிய, ஐரோப்பிய நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்புமுறை தமிழ் வாசகர் களுக்குப் புதிதானதொன்றல்ல என்றவகையில் இப்பகுப்பாக்கம் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ் நூல்களின் பகுப்புத் தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| 000 - 099 | பொதுப்பிரிவு |
| 100 - 199 | மெய்யியல்துறை |
| 200 - 299 | சமயங்கள் |
| 300 - 399 | சமூக விஞ்ஞானங்கள் |
| 400 - 499 | மொழியியல் |
| 500 - 599 | தூய விஞ்ஞானங்கள் |
| 600 - 699 | பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம் |
| 700 - 799 | கலைகள், நுண்கலைகள் |
| 800 - 899 | இலக்கியம் |
| 900 - 999 | புவியியல், வரலாறுகள் |

பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த உப பிரிவுகள் ஒவ்வொன்றும் மேலும் பத்து பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. நூலியல் துறையில் பரிச்சய மில்லாத சாதாரண ஒரு வாசகனாலும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இப்பகுப்பு முறையை இலகுவானதாக முன் வைத்திருப்பத னூடாக திரு. என்.செல்வராஜா அவர்கள் தான் ஒரு அனுபவம்மிக்க சிரேஷ்ட நூலகர் என்பதை நிரூபித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பதிவுகள்

நூல்தேட்டம் நான்கு தொகுதிகளையும் ஆய்வுரீதியாக நோக்கு மிடத்து இரண்டு விடயங்களை சிறப்புப் பதிவுகளாக அவதானிக்கலாம்.

1. இலங்கை தொடர்பான பன்னாட்டவர்களின் தமிழ்ப் படைப்புக்கள்
2. முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்.

நூல்தேட்டம் முதலாம் தொகுதியில் காணமுடியாத விசேட சேர்க்கையொன்றினை இரண்டாம் தொகுதியிலிருந்து காணமுடி கின்றது. அதாவது இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேச மயப்படுத்தல் காரணமாக ஈழத்தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழரின் பிரச்சினைகள் பற்றிய தேடலின் விளை வாக, தமிழகத்திலும், மலேசியாவிலும், ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக் கலும் அவசியம் என்ற அடிப்படையில் தனியானதொரு பிரிவாக அவை சேர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நூல்தேட்டம், ஈழத்தமிழ்மொழி நூலியல் முயற்சிகளில், இயன்ற வரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைவதை நான்கு நூல்தேட்டங்களினூடாகவும் நூலாசிரியர் மேற்கொண்டுள்ள பிரயத்தனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அது பற்றிய தகவலையும் பின்னைய தொகுதியில் நூலாசிரியர் தர எத்தனித்துள்ளார். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்படாது. அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளார். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் சேர்த்துள்ளார்.



கூட்டுமொத்தமாக நோக்குமிடத்து இந்நான்கு தொகுதிகளும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியதிகளை உள்வாங்கியி ருப்பதும், முறைப்படுத்தல், எளிமையாக்கல், இவற்றுடன் விஞ்ஞானத் தன்மைமிக்கதாகவும் இருப்பது நூலாசிரியரின் அனுபவத் திறனை வெளிப்படுத்தும் முத்திரையாகப் பிரகாசிக்கின்றதென்றால் மிகையாகாது.

## நூலியற் பதிவுகள்

1970களில் இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்மொழி நூல்க ளைப் பட்டியலிடும் சில நடவடிக்கைகள் தனிப்பட்ட சிலரால் மேற் கொள்ளப்பட்டன. முழுமையான முயற்சிகளாகவன்றி ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த பட்டியல்களாகவோ (உதாரணமாக சிறுகதை, நாவல் என்ற அடிப்படையில்), அன்றேல் சில எழுத்தாளர்களின் அல்லது வெளியீட்டாளர்களின் வெளியீடுகளைப் பட்டியல்படுத்தும் முயற்சிக ளாகவோ அவை இருந்தன. அதேபோல 1979ம் ஆண்டில் பேருவளை நளீமிய்யா இஸ்லாமிய நூலகத்துக்காக வேண்டி 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - இலங்கை நூல்களின் தேர்ந்தெடுத்த பட்டியல்' எனும் நூற்பதிவு எஸ்.எம். கமால்தீன் அவர்களால் எழுதப்பட்டது. ஆனால், இம்முயற்சிகள் அனைத்தும் தொடர்ச்சியான நடவடிக்கை களாகவோ, அன்றேல் இலங்கையின் நூலியல் வரலாற்றின் நூற் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலோ அமைய வில்லை.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகராக இருந்த அமரர் எச்.ஏ.ஐ. குணதிலக்கா A Bibilography of Ceylon: a Systematic Guide to the Literature on the Land, People, history and culture published in the Western languages from the Sixteenth century to the present day என்ற தலைப்பில் ஆங்கில நூல்களுக்கான நூற்பட்டியலை 1970-1983 காலப்பகுதியில் 5 தொகுதிகளாக வெளியிட்டார். சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணை நூலாக இது இன்றும் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, முழுமையைத் தேடிச்செல்லும் நூற்பதிவு முயற்சியில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று பின்வரும் மூன்று ஆவணங்களும் முக்கியம் பெறுகின்றன.

1. தேசிய நூற்பட்டியல்
2. சுவடி ஆற்றுப்படை
3. நூல்தேட்டம்

மேற்படி மூன்று ஆவணப்பதிவுகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது இலங்கையில் வெளியான நூல்களைப் பதிவு செய்யவேண்டும் என்பதை பொது நோக்காகக் கொண்டிருந்த போதிலும் கூட தோற்றுநிலை, உள்ளடக்க வடிவம், மக்களைச் சென்றடையும் திறன் ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

'தேசிய நூற்பட்டியலா'னது அரசாங்க ஆதரவுடன் நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி. தமிழ்மொழி மூல நூல்கள் மாத்திரமல்லாமல் இலங்கையில் வெளிவரும் ஏனைய மொழி நூல்களும் இங்கு உள்வாங்கப்படுகின்றன. ஆனால், நூல்களை 'தேடிப்பெறல்' என்ற நிலைக்கு அப்பால் நின்று கிடைக்கும் நூல்களையே பதிவாக்கி வருகின்றது. சட்டரீதியாக 'அச்சகங்கள் பதிவுக்கான வழியை வகுக்கும்' என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நடைமுறையில் இந்நிலைமை பெருமளவிற்கு சாத்தியப்படவில்லை. தான் அச்சிடும் நூல்களின் ஐந்து பிரதிகளை ஆவணக்காப்பகத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற சட்டம் காணப்பட்ட போதிலும் கூட, இதை மீறும் அச்சகங்கள் எவையும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படுவதில்லை. எனவே, அச்சகங்களின் அசிரத்தை - தெரியாமை போன்ற காரணங்களும், கிடைக்கும் நூல்களின் பதிவுடன் திருப்திகண்டு கொள்ளும் நிலையும் முழுமையான தேசிய நூற்பட்டியல் உருவாக்கத்துக்குத் தடைக்கற்கள் எனலாம்.

'சுவடி ஆற்றுப்படை' ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரம் பதிவாக்கியுள்ளது. கொழும்பு ஆவணக்காப்பகம்,



தேசிய நூலகம், அரும் பொருட்சாலை நூலகம் ஆகிய இடங்களில் பதிவுகளைப் பெற்றும், தனிப்பட்ட நூல் தேடுதல்களை நேரடியாக மேற்கொண்டும் தரவுகள் பெறப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால், நூல்தேட்டம் நான்கு தொகுதிகளிலும் பதிவாக்கப்பட்டுள்ள நாலாயிரம் புத்தகப் பதிவுகளும் நேரடித் தேடலின் வெளிப்பாடே. திருவாளர் என்.செல்வராஜா அவர்கள் 1991ம் ஆண்டிலிருந்து தனது குடும்பத்துடன் ஐக்கிய இராச்சியத்தில் புலம்பெயர்ந்து வசித்து வருகின்றார். எனவே, இலங்கையின் ஆவணக்காப்பகப் பதிவுகளையோ, அன்றேல் தேசிய நூற்பட்டியல் பதிவுகளையோ அவரால் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு மிகவும் அரிது. தான் பதிவு செய்துள்ள நாலாயிரம் நூல்களையும் நேரடியாக நூலகங்களிலும், தனியார் இல்லங்களில் உள்ள சேர்க்கைகளிலும், புத்தக விற்பனை நிலையங்களிலும் பார்த்துத் தானே குறிப்பெடுத்து நூல்தேட்டத்தில் சேர்த்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

எனவேதான் தேசிய நூற்பட்டியல் நூற்பதிவிலும், சுவடி ஆற்றுப்படை நூற்பதிவிலும் காணமுடியாத ஒரு விசேட பண்பினை 'நூல்தேட்டத்தில்' காண முடிகின்றது. அதாவது நூல்பற்றிய சுருக்கக் குறிப்பே அந்த விசேட பண்பாகும். பதிவாக இடம் பெற்றுள்ள நூல்களின் முக்கியமான உள்ளடக்கம், அந்நூலின் மூலம் தெரிவிக்கப்படும் அடிப்படைக் கருத்து என்பவற்றை சில வரிகளில் சுருக்கமாகவும், இறுக்கமாகவும் தெரியப்படுத்தி அந்நூல் பற்றிய உணர்வினை உள்வாங்க வைக்கின்றார். இதனால் தான் இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டிய முக்கிய ஆவணங்களில் ஒன்றாக நூல்தேட்டத்தைக் குறிப்பிட்டேன். முதலாம் தொகுதியில் நூல்கள் பற்றிய குறிப்புக்கள் இரத்தினச் சுருக்கமாகக் காணப்பட்ட போதிலும் கூட இரண்டாம், மூன்றாம், நான்காம் தொகுதிகளில் சுருக்கக் குறிப்பினூடாக நூல் பற்றிய தெளிவான விளக்கத்தினைப் பெறமுடிகின்றது. இதனை ஒரு சிறு உதாரணம் மூலமாக விளங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டத்தில் 'ஸகாத் கோட்பாடும் நடைமுறையும்' எனும் புத்தகப் பதிவு இடம் பெற்றுள்ளது. (பதிவு எண் 2173) இது ஒரு இஸ்லாமிய நூல். 'ஸகாத்' என்பது ஒரு அரபிப்பதம். நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்கள் தனது சுருக்கக் குறிப்பில் இந்நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

> *'இஸ்லாம் மதம் 5 பிரதான கடமைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் மூன்றாவது கடமை 'ஸகாத்' எனப்படும் ஏழைவரியாகும். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களையும்முகமாக வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தமது வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட வீதத்தை ஏழைகளுக்கு 'ஸகாத்'தாக வழங்க வேண்டும். இது வசதியுள்ள ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் கட்டாயமானதாகும். இதனை விளக்கும் விரிவான ஆய்வு-விளக்கமாக அமையும் இந்நூல் பிரதானமாக நான்கு தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. 1. ஸகாத் கோட்பாடும் முக்கியத்துவமும், 2. ஸகாத் விதியாகும் பொருட்களும் அவற்றின் அளவுகளும், 3. ஸகாத் வழங்கக் கடமைப்பட்டோரும், அதனைப் பெறத்தகுதியுடையோரும், தகுதியற்றோரும், 4. ஸகாத் சேகரிப்பும் விநியோகமும். இந்நூல் பாகிஸ்தான் இஸ்லாமாபாத் சர்வதேச பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் இலங்கை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான நால்வர் இணைந்து எழுதியதாகும்.'*

திரு. என். செல்வராஜா அவர்கள் ஒரு இஸ்லாமியர் அல்ல. இருப்பினும் இத்தகைய விளக்கத்தினை அவர் தனது சுருக்கக் குறிப்பினூடாக விளக்கியுள்ளார் என்றால் தான் பதிவுக்குட்படுத்தும் நூல்களை அவர் நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதே நேரம் இந்தக் குறிப்பினைப் படிக்கும் எவருக்கும் நூலின் தன்மையினை மிகவும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். இதே முறையினைத்தான் நூல்தேட்டத்தில் இடம்பெற்றுள்ள சகல நூல் பதிவுகளிலும் காணமுடிகின்றது.



ஈழத்தைச் சேர்ந்த பல தமிழ் எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, சுவிடன். டென்மார்க், அவுஸ்திரேலியா போன்ற பல்வேறு மேற்கத்தைய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். தாம் வாழ்ந்த சூழலில் இருந்து மாறுபட்ட சூழலில் புலம்பெயர்ந்து வாழும்போது தமிழ்மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், பாதிப்புக்களுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். எனவே, புலம் பெயர் நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய முயற்சிகளும், நூலியல் முயற்சிகளும் விசேடமாக ஆராயப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். 'நூல்தேட்டத்தில்' இத்தகைய புலம்பெயர் தமிழ் நூல்களும் பதிவுக்குட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். புலம்பெயர் தமிழ்நூற்களின் பதிவு நூல்தேட்டம் நான்கு தொகுதிகளிலும் சுமார் நானூறுக்கும் மேல் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் எந்தவொரு எழுத்தாளராலும் மேற் கொள்ளப்படாத தனிமுயற்சி எனத் துணிந்து கூறலாம்.

நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்கள் 'நூல்தேட்டத்தை' நூலுருவாக்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாது நூல்தேட்டத்தினை உலகில் பல பாகங்களிலும் ஆவணப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையும் குறித்துக்காட்டக் கூடிய ஒரு விடயமாகும்.

'நூல்தேட்டம் நூற்றொடர்' தனியொரு மனிதனால் மேற்கொள் ளப்படும் விசாலமான ஒரு முயற்சி என்பதை நான் அறிவேன். இந்த ஆவணப்பதிவு முயற்சிக்காக வேண்டி அவர் பல நாடுகளுக்கும் அடிக்கடி செல்கின்றார். தனது விடுமுறை நாட்களில் கூட இரவு, பகல் பாராது தனது நேரத்தை ஒதுக்கி பதிவுக்கான சான்றுகளைத் தேடி அலைகின்றார். தனது சொந்தப் பணத்தில் தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்து பதிவுகளைத் திரட்டுகின்றார். உண்மையிலே ஒரு தியாக அடிப்படையில் இந்தப் பதிவுகளை ஆவணப்படுத்தி வருகின்றார் என்றால் மிகையாகாது. இருப்பினும் 'நூல் ஆய்வு' என்ற கண்ணோட்டத்தில் நூல்தேட்டத்தில் சில குறைகளையும் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 'நூல்தேட்டம்' நூற்றொடரில் சமகாலத்தையதும், அண்மைக் காலத்தையதும் நூல்களே பெருமளவில் பதிவாகியுள்ளன. ஆரம்பகாலத் தமிழ் நூல்களின் பதிவுகள் மிகவும் குறைவா கவே காணப்படுகின்றன. புழக்கத்திலில்லாத பழங்காலத்துத் தமிழ் நூல்களையும் சுவடிச்சாலைகளில் தேடியெடுத்துப் பதிவுக்கு உட்படுத்த முடியுமாயின் அந்நூல்கள் பற்றிய தரவுக ளையும் அழிவிலிருந்து பாதுகாக்க முடியுமானதாக இருக்கும்.

திரு. செல்வராஜா அவர்களின் புலம்பெயர் நிலையைக் கருத் திற் கொள்ளும் போது இத்தகைய பதிவுகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவாகவே அவருக்கு உள்ளதை மறுக்க முடியாது. எனவே, ஈழத்தில் வாழும் பழம்பெரும் எழுத்தாளர் களும், ஆய்வாளர்களும் இத்தகைய இலக்கியங்கள் பற்றிய விரிவான தகவல்களை செல்வராஜா அவர்களுக்கு வழங்க ஏற்பாடுகளைச் செய்வார்களாயின் இக்குறைபாட்டையும் அவரால் களைய முடியும் என எண்ணுகின்றேன். பிரித்தானிய நூலகத்தையும் இவர் தனது தேடலுக்குப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பும் பிரித்தானியாவில் உள்ளது.

2. (அ) சில இடங்களில் நூல்வெளியீட்டொழுங்கு பேணப்படாம லுள்ளது. அதாவது பதிவுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு நூலின் பல தொகுதிகள் வெளிவந்திருப்பின் பின்னர் உள்ள தொகுதி விபரங்கள் நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளிலும், முன்னாள் உள்ள தொகுதி விபரங்கள் நூல்தேட்டத்தின் பின்னைய தொகுதிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய மயக்கம் வாசகர்களையும், ஆய்வாளர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தலாம்.

(ஆ) சுவடி ஆற்றுப்படையுடன் ஒப்பு நோக்கும் பொழுது நூல் தேட்டத்தில் ஆண்டு ஒழுங்கில் பதிவுகள் பதிவாக் கப்படவில்லை. 'சுவடி ஆற்றுப்படை' முதலாம் தொகு தியானது 1868ம் ஆண்டில் முஸ்லிம்களால் எழுதப்பட்ட



முதல் நூல் எனக் கருதப்படும் 'பேருவளை செய்கு முஸ்தபா வலியுல்லாஹ் வின்' 'மீஸான் மாலை' முதல் - 1949ம் ஆண்டுவரை வெளிவந்த 198 நூல்க ளையும் ஆண்டொழுங்கில் பதிவாக்கியுள்ளது. இதே போன்றே சுவடி ஆற்றுப்படையின் இரண்டாம் தொகுதி யில் 1950 - 1969ம் காலப் பகுதியிலும், மூன்றாம் தொகுதியில் 1970 - 1995 காலப் பகுதியிலும், நான்காம் தொகுதியில் 1996 -2000 காலப் பகுதியிலும் வெளி யான நூல்கள் பதிவாகியுள்ளன. ஆனால், நூல்தேட் டத்தில் ஆண்டொழுங்கு எவ்விடத்திலும் பேணப்பட வில்லை.

'நூல்தேட்டம்' காலவரையறை விதிக்கப்படாமல் தொகுக்கப் பட்டுள்ள ஓர் ஆவணக்களஞ்சியமாகும். எனவே, 19ம் நூற்றாண்டில் வெளியான நூல்களும் பதியப்படலாம். 21ம் நூற்றாண்டில் வெளியான நூல்களும் பதியப்படலாம். குறிப்பாக நூலாசிரியர் தனக்குக் கிடைக்கும் நூல்களை கிடைக்கும் ஒழுங்கிலே பதிவாக்குவதினால் மேற்படி குறைபாடுகள் தவிர்க்க முடியாமல் போவது இயற்கை. 'குறிப்பாக, தனக்குக் கிடைக்கும் அல்லது தன் கண்களால் பார்வையிடும் நூல்களை மாத்திரம் பதிய வேண்டும். அப்போது தான் நூறுவீதம் ஆதாரபூர்வமானதாகவும், உண்மையுள்ளதாகவும் தனது பதிவுகள் அமையும்' என்ற கொள்கையில் திரு. செல்வராஜா உறுதியாக இருப்பதினால் ஆண்டொழுங்கினைப் பேண முயன்றால் அவரால் 'நூல் தேட்டம்' முயற்சியே சாத்தியமற்றும் போகலாம். எவ்வாறாயினும் முதல் ஐந்து தொகுதிகளும் வெளியானவுடன் ஐந்து தொகுதிகளையும் தொகுத்து நூல் தேட்டத்தின் பாரிய பதிப்பொன்றைத் தமிழகத்தில் கொண்டுவரும் எண்ணம் நூலாசிரியருக்குண்டு. அச்சந்தர்ப்பத்தில் ஆண்டொழுங்கினைப் பேணியும் தனது பதிவுகளை அட்டவணைப்படுத்தித் தருவாராயின் மேற்படி குறைபாடுகளை ஓரளவேனும் நிவர்த்திக்க முடியுமானதாக இருக்கும்.

3. (அ) நூல்தேட்டம் நான்கு தொகுதிகளையும் நோக்கும்போது மூன்றாவது தொகுதியில் அச்சுப்பதிப்பு குறை தரத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. குறிப்பாக மூன்றாம் தொகுதியில் 489ம் பக்கம் முதல் 522ம் பக்கம் வரை தலைப்பு வழிகாட்டியும், ஆசிரியர் வழிகாட்டியும் தரப்பட்டுள்ளன. அச்சீட்டில் இவை மங்கலான அச்சில் இருப்பதினால் சிறிது காலத்தில் இவை அழிந்துவிடலாம்.

(ஆ) புத்தகம் கட்டுதல் (binding;) முறையிலும் திருப்தி கொள்ளமுடியவில்லை. முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளை அடிக்கடி புரட்டும்போது தாள்கள் வேறாகி விடும் அபாயம் உள்ளது.

நூலின் உள்ளடக்க அமைப்பு விடயங்களில் காட்டும் ஆர்வத்தைப் போலவே நூலின் அச்சீட்டின் போதும் நூலாசிரியர் ஆர்வம் காட்டுதல் அவசியமானதாகும். 'நூல்தேட்டம்' ஓர் ஆவணப் பதிவாக்கல் புத்தகம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே, நீண்ட காலம் பாதுகாத்து வைக்க வேண்டிய பொக்கிஷமாக நூல் தேட்டத்தின் ஒவ்வொரு தொகுதியும் இருப்பதினால் தரமான 'சீரான அச்சுப்பதிவுடன் தாள்கள் வேறாகி விடாத வண்ணம் 'கடின மட்டை கட்டுதல்' (ஹார்ட் போர்ட் பைண்டிங்) மூலம் புத்தக நிறைவினை மேற்கொள்வது அவசியமானதாகும். நூல்தேட்டத்தின் முதலாம் தொகுதி ஐக்கிய இராச்சியத்தில் அச்சாக்கப்பட்டது. ஏனைய மூன்று தொகுதிகளும் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டன. எனவே, பதிப்பு வேலைகளை நூலாசிரியரினால் நேரடியாக அவதானிக்க முடியாவிடினும் கூட அவர் ஒரு பிரதிநிதியை நியமித்தாவது அவற்றை அவதானிக்கலாம்.

**முடிவுரையும், கருத்துரையும்.**

'நூல்தேட்ட முயற்சி' என்பது இலகுவான பணியல்ல. இலங்கை தேசிய ஆவணக்காப்பக நூலகத்தில் சுமார் ஒன்பது இலட்சம் நூல்களும், பேராதனைப் பல்கலைக் கழகநூலகத்தில் சுமார் ஐந்து இலட்சம் நூல்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.



பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை தமிழ்மொழி மூலமாக பல ஆயிரக் கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. ஆகவே, 'நூல்தேட்ட' முயற்சியில் முழுமையினைக் காண்பதென்பது மிகவும் கடினமான முயற்சியாகும்.

திரு. என். செல்வராஜா அவர்கள் ஆண்டொன்றுக்கு ஆயிரம் பதிவுகள் என்ற ரீதியில் தனது தேடல் பணியினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். 'நூல்தேட்டம்' நான்காம் தொகுதியின் கணனிப்படுத்தல் வேலைகள் நிறைவடைந்த அடுத்த நிமிடத்திலேயே ஐந்தாம் தொகுதிக்கான பதிவுகளையும் ஆரம்பித்துவிட்டார். எனவே, இதே வேகத்தில் நூலாசிரியர் செல்லுமிடத்து ஈழத்துத் தமிழ் நூல்தேட்டத்தின் முழுமையினை நோக்கி அவரால் இலகுவாகப் பயணிக்க முடியும். பொதுவாக 'தேசிய நூற்பட்டிய'லுக்கு தமிழ்மொழி மூலமான நூல்கள் பதிவுக்காக அனுப்பப்படாத நூல்கள் கூட 'நூல்தேட்டத்தின்' பதிவுக்காக ஐக்கிய இராச்சியத்துக்கு நேராக அனுப்பி வைக்கப்படுகின்றதென்றால் இப்பயணத்தில் என்.செல்வராஜா அவர்கள் பெற்றுள்ள 'வெற்றி'யையே அது புலப்படுத்துகின்றது. அதேபோல எது விதமான பதிவுகளுக்கும் உட்படுத்தப்படாத இந்தியாவில் அச்சிடப்படும் ஈழத்தவர்களின் தமிழ்மொழி நூல்களும் செல்வராஜாவுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

நிச்சயமாக பக்கச்சார்பற்ற தன்மை, இனவேறுபாடுகளையும், பிரதேச வேறுபாடுகளையும் கருத்திற் கொள்ளாத மனோபக்குவம், அயராத முயற்சி, தொடர்ச்சியான செயற்பாடு, உறுதியான இலட்சியம் போன்ற பண்புகளே திரு. என்.செல்வராஜா அவர்களின் இத்தகைய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படையை வழங்கி வருகின்றன என்பது வெள்ளிடை மலை.

இத்தகைய பெறுமதிமிக்க நூல்தேட்டஆவணத்தை தமிழ் மொழியில் மாத்திரம் அல்லாமல் இலங்கையின் தேசிய மொழியான சிங்களத்திலும், சர்வதேச மொழியான ஆங்கிலத்திலும் வெளிக்கொணரக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுமிடத்து தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி நூல்களையும் இணங்காட்ட வாய்ப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தனியொரு மனிதனால் சாதிப்பது சிரமமான காரியம், அதிலும் குறிப்பாக திரு. செல்வராஜா அவர்களால் இப்பணி மேற்கொள்ளப்படக்கூடாது. ஏனெனில், அவர் தனது நூல் தேட்டத்தினை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டால் தேசிய சொத்தாகக் கருதப்படக் கூடிய 'நூல்தேட்டம்' தொடரின்மூல வேலைகள் ஸ்தம்பித்துவிடலாம். எனவே, மதத்தையும், கலாசாரத்தையும், தமிழ்மொழியினையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்து சமய கலாசார அமைச்சு, அன்றேல் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன இதுவிடயத்தில் ஆர்வம் காட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இனங்களுக்கிடையே ஒற்றுமை, பரஸ்பர நல்லிணக்கம் போன்ற எண்ணக் கருத்துக்களை முதன்மைப்படுத்திவரும் மேற்குறிப்பிட்ட அரசநிறுவனங்கள் தமிழ்மொழியின் முக்கியத்துவத்தையும், தமிழ்மொழி மூலமான நூல்களின் தன்மையினையும், உணர்வினையும் பெரும்பான்மைச் சமூகத்தினரின் அவதானத்துக்குக் கொண்டு வர வேண்டும். இதற்கான முதற்படி இதுபோன்ற ஆவணப்பதிவுகளை மொழிபெயர்த்து சிங்கள மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் வெளிக்கொணர்வதேயாகும்.

நிறைவாக 'நூல்தேட்டம்' நான்கு தொகுதிகள் பற்றியும் சுருக்கமாகப் பிரஸ்தாபிப்பதென்றால்'..

*'நூல்தேட்டம்' என்பது ஒரு தேசிய சொத்து. நூல்தேட்டம் முயற்சிகள் இடைநடுவே நின்றுவிடாது பாதுகாக்க வேண்டியது எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் கடமையாகும். திரு.செல்வராஜா அவர்களும் இந்த முயற்சியினை இடைவிட்டு விடாது தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நிச்சயமாக தமிழ் இலக்கிய வரலாற்றில் 'நூல்தேட்டம்' என்பது சாகாவரம் பெற்றதோர் ஆவணமாகப் பதிவாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.*

*-முற்றும்-*





# நூல் தேட்டம்:
## நூலாசிரியர் என். செல்வராஜா
### *ஓர் அறிமுகம்*

கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 'ஆனைக் கோட்டை' எனுமிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட என். செல்வராஜா அவர்கள் பிரபல எழுத்தாளரும், மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியருமாவார். நடராஜா, சிவபாக்கியம் தம்பதியினரின் புதல்வராக 1954, அக்டோபர் 20ம் திகதி பிறந்த இவர் நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயம், நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

1970களில் இலங்கை நூலகச் சங்கத்தின் 'நூலகவியல்' நூலக விஞ்ஞானத் துறையில் டிப்ளோமா பயிற்சி பெற்ற இவர், சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரி (மே1978- ஏப்ரல் 1979), யாழ். மாவட்ட சர்வோதய நூலகம் (ஏப்ரல் 1979 ஜனவரி 1980), ஆகியவற்றில் பணியாற்றிய பின்னர், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகர் பதவியை ஏற்று (பெப்ரவரி 1980- பெப்ரவரி 1981) திருமலை - மாவட்டத்திலும் பதவி வகித்தார்.

1981 பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் சபையின் UNDP Volunteer Project இன் கீழ் இந்தோனேஷியாவிற்கு கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகச் சென்று, அங்குள்ள 'பன்டுங்' மாநிலத்தில் கிராம நூலகத் திட்டமொன்றை வெற்றிகரமாக அறிமுகம் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 இல் நாடு திரும்பிய பின்னர் இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ். மாவட்ட மத்திய நூலகப் பொறுப்பாளராகப் பதவியேற்று (மார்ச் 1982 தொடக்கம் நவம்பர் 1983 வரை) 12 கிளை நூலகங்களை UNESCO திட்டத்தின் உதவியுடன் உருவாக்கினார். 1983 இல் திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட 'ஈவ்லின் இரத்தினம்" பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகப் பொறுப்பாளர் பதவியை ஏற்று (டிசம்பர் 1983 முதல் 1989 டிசம்பர் வரை) கடமையாற்றிய இவர் 1990இல் கொழும்பிற்கு குடும்பத்துடன் இடம்பெயர்ந்தார்.

அங்கும் INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் நூலகப் புனரமைப்பைப் பொறுப்பேற்று (ஜனவரி 1990 தொடக்கம் அக்டோபர் 1992 இடைப்பட்ட காலம்) அந்நிறுவன வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

1991 - 10 - 04ம் திகதி முதல் புலம் பெயர்ந்து தற்போது ஐக்கிய இராச்சியத்தின் 'பெட்போர்ட்ஷெயர்' பிராந்தியத்தில் தனது குடும்பத்துடன் வசித்து வருகின்றார். இவரின் அன்பு மனைவி விஜயலட்சுமி, ஆசைச் செல்வங்கள் சௌம்யா, கௌதமன், மௌலியா ஆகியோராவர்.

செல்வராஜா அவர்களின் எழுத்தியல் துறை ஈடுபாட்டினை ஆராய்கையில் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் ஆற்றல் மிக்க இவரின் முதலாவது ஆக்கம் இந்தோனிஷியாவிலிருந்து வெளிவரும் 'ஜெமா ரிபா' சஞ்சிகையின் 18வது இதழில் 'வொலண்டரி சேவிஷர்ஸ் இன் ஸ்ரீலங்கா' எனும் தலைப்பில் 1981 நவம்பர் மாதம் பிரசுரமானது.

தமிழ்மொழி மூலமான முதலாவது ஆக்கத்தினை 'உருமாறும் பழமொழிகள்' எனும் தலைப்பின் கீழ் 'ஈழநாடு' 1984ல் பிரசுரித்தது. இவற்றைத் தொடர்ந்து இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை இவர் எழுதியுள்ளார். இவற்றை இலங்கையில் இருந்து வெளிவரும் (வெளிவந்த) சட்டடே ரிவியூ, சஞ்சீவி, அறவழி, தினகரன், ஞானம், 'நோர்த் ஈஸ்ட் ஹெரல்ட்,' கொழுந்து, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளிவரும் தமிழோசை, புதினம், தேசம், தமிழ்டைம்ஸ், சுடரொளி, இதயங்கள் துடிக்கட்டும், வடலி, உதயன், தென்றல், தமிழ்வணிகம், நிருபம், தமிழ் உலகம், பூபாள ராகங்கள் ஆகிய சஞ்சிகைகளும். நோர்வேயில் இருந்து வெளிவரும்



சர்வதேச தமிழர் சஞ்சிகையும், கனடாவிலிருந்து வெளிவரும் ஈழமுரசு, நம்நாடு, தமிழர்தகவல் ஆகிய சஞ்சிகைகளும், இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன், ஏழைதாசன், நற்றமிழ் ஆகிய சஞ்சிகைகளும், பிரான்ஸிலிருந்து வெளிவரும் ஈழமுரசு, தமிழ் நெஞ்சம் ஆகிய சஞ்சிகைகளும், சுவிட்சர்லாந்திலிருந்து வெளிவரும் குருத்து சஞ்சிகையும், ஜெர்மனியிலிருந்து வெளிவரும் மண், பூவரசு, நமது இலக்கு ஆகிய சஞ்சிகைகளும், மலேசியாவிலிருந்து வெளிவரும் இலக்கிய குரிசில், மலேசிய நண்பன், செம்பருத்தி ஆகிய இதழ்களும் பிரசுரித்துள்ளன.

ஐக்கிய இராச்சியத்தில் 'இலண்டன்' நகரிலிருந்து இயங்கும் 'IBC தமிழ்' என்ற அனைத்துலக வானொலி ஒலிபரப்பில் ஞாயிறு தோறும் காலை 7.15 முதல் 7.30 வரை 'காலைக்கலசம்' என்ற நிகழ்ச்சியில் 'இலக்கியத் தகவல் திரட்டு' எனும் உரையினை நிகழ்த்தி வருகின்றார். 2002ம் ஆண்டு மே மாதத்திலிருந்து தொடர்ச்சியாக இநத உரை இடம் பெற்றுவருகின்றது. இந்நிகழ்ச்சியில் மலேசியா உட்பட புகலிடத்துத் தமிழ் நூல்களும், எழுத்தாளர்களும், அவர்களின் படைப்புகளும் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. அத்துடன் 'தீபம்' தொலைக்காட்சியிலும் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். இவரின் எழுததுக்களில் நூலகவியல், வெளியீட்டுத்துறை, எழுத்தாளர்கள், நூல்வெளியீட்டு நிகழ்ச்சிப் பதிவுகள் என்பன பிரதான இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம்.

மூத்த நூலகர் என். செல்வராஜா அவர்களின் இலக்கியப் பணியில் இமயமாகத் திகழ்வது இவரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் "நூல்தேட்டம்" புத்தகத் தொடராகும். ஓர் அரச திணைக்களத்தினூடாக அல்லது நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய பணியினையே இவர் தனியொரு நபராக நின்று செயலில் காட்டி சாதனை படைத்து வருகின்றார். இலங்கையில் தமிழ்பேசும் எழுத்தாளர்களின் தமிழ்நூல்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரவலாக வெளியிடப்பட்டு வந்த போதிலும் கூட எந்தவொரு நாடும், நிறுவனமும் அவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தும் நடவடிக்கையைச் செய்ய முன்வரவில்லை. இலங்கையின் 'தேசிய நூலகம்' இத்தகைய பணியைச் சட்டபூர்வமாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் கூட தமிழ் நூல்களை ஆவணப்படுத்துவதில் அது போதிய அக்கறை காட்டவில்லை.

இந்நிலையில் தனது 'அயோத்தி நூலக சேவைகள்' வெளியீட்டு அமைப்பின் மூலம் ஈழத்து எழுத்தாளர்களின் தமிழ் நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப்படுத்தும் பணியினை 1990இல் தொடங்கி இன்றுவரை நான்கு தொகுதிகளை 'நூல்தேட்டம்' எனும் பெயரில் வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் நூல்களென நான்கு தொகுதிகளிலும் நான்காயிரம் தமிழ்நூல்கள் இவரால் பதிவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கையிலிருந்து தமிழ்மொழிமூலமாக 'நூலக விஞ்ஞானம்' சம்பந்தமாக வெளிவந்துள்ள ஒரே சஞ்சிகை 'நூலகவியல்' என்பதாகும். இந்தக் காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியரும், வெளியீட்டாளரும் செல்வராஜா அவர்களேயாவார்.

செல்வராஜா இதுவரை 17 புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். விபரம் வருமாறு;

1.
**உருமாறும் பழமொழிகள்:** என்.செல்வராஜா. ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம், அச்சக விபரம் தரப்படவில்லை).
v, 30 பக்கம். விலை ரூபா 15, அளவு: 21x14 செ.மீ.

பழமொழிகள், மரபுத்தொடர்கள் போன்றவற்றில் காலப்போக்கில் ஓரிரு எழுத்துக்கள் சேர்வதாலோ, அல்லது விடுபடுவதாலோ சொற்களில் இரட்டை அர்த்தம் தொனிப்பதாலோ பழமொழிகளில் திரிபுகள் ஏற்படுகின்றன. காலத்துக்குக் காலம் சமுதாயத்தில் ஏற்படும் கருத்து மாற்றங்களுக்கு ஏற்பவும் பழமொழிகள் உருமாற்றம் பெற்றுள்ளன. இன்று நடைமுறையில் இப்படியாக உருமாற்றம் பெற்ற பழமொழிகள், உவமைத் தொடர்கள், மரபுத்தொடர்கள் போன்றவற்றைத் தொகுத்து, அவற்றின் மூலக்கருத்துக்களையும், தற்காலக் கருத்துக்களையும் இலக்கிய, நாட்டாரியல் சான்றாதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் நூல் இதுவாகும்.

2.
**ASelect Bibliography of Dr. James Thevathasan Rutnam;** N.Selvarajah. Jaffna: Evelyn Rutnam Institute for Inter - Cultural Studies, Thirunelveli, 1st edition. July 1988. (Jaffna:New Era Printers, Main Street).
v, 37p, 18.5 x 12.5 cm.

Dr. James Thevathasan Rutnam has to his credit a total of 192 items published in the leading Newspapers in the Island, periodicals and profess



ional Academic Journals. These publications were spread over a period of 60 years since 1923. He is the Founder of the Evelyn Rutnam Institute for Inter - cultural Studies, which was built after the burning of the Jaffna Public Library.

3.
**கிராம நூலகப் பொறுப்பாளர்களுக்கான வழிகாட்டி,** என்.செல்வராஜா. புங்குடுதீவு: முத்தமிழ் நிதிய வெளியீடு, சர்வோதயம், 1989.
28ப, (கல்லச்சுப் பிரதி).

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கும் சர்வோதய சிரமதானச் சங்கம், புங்குடுதீவில் தன் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. தலைமையகத்தில் பிரதான நூலகத்தையும், தீவகம் அடங்கிலும் பதினொரு கிளை நூலகங்களையும் கிளிநொச்சியில் ஒரு கிளை நூலகத்தையும் கொண்டு அது இயங்கியது. காலத்துக்குக் காலம் கிராம மட்டத்தில் நூலக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தலைமையகத்திலும், கிளைகளிலும் கிராமோதய ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் நூலகக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அத்தகைய கருத்தரங்குகளில் பயன்படுத்தவென உருவாக்கப்பட்ட பொதுவான கைநூல் இதுவாகும்.

4.
**கிராமிய நூலகங்களும், அபிவிருத்தியும்.** என்.செல்வராஜா. ஆனைக்கோட்டை. அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம் : நியு ஈரா பப்ளிகேஷன்ஸ்).
86 பக்கம், விலை ரூபா 30, அளவு 18.5x12.5 செ.மீ.

இந்நூல் தமிழ்ப் பிரதேசங்களை மையப்படுத்தி கிராம நூலக இயக்கம், சிறுவர் நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பாலர்களுக்கான நூல்களைக் கிராம மட்டத்தில் தயாரித்தல், சனசமூக நிலையங்களின் நூலக நடவடிக்கைகள், நூல் கொள்வனவு போன்ற விடயங்களை விளக்கும் கட்டுரைகளைக் கொண்டது. இவை ஏற்கெனவே இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமானவை.

5.
**நூலகப் பயிற்சியாளர் கைநூல்.** என்.செல்வராஜா. திருகோணமலை: நகராட்சி மன்றம், 1வது பதிப்பு, நவம்பர் 1989.
27ப. கல்லச்சுப் பிரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










திருகோணமலை நகரசபையின் ஆதரவுடன் திருகோணமலை மாவட்ட நூலகர்களுக்கான கருத்தரங்கும் இருநாள் பயிற்சியும் நவம்பர் 1989ல திருகோணமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் அப்போதைய திருகோணமலை நகரசபை நூலகர் எஸ். தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அந்நிகழ்வின் போது பங்கேற்ற கிழக்கிலங்கை நூலகர்களுக்கு வழங்கப்பட்ட கைநூல் இதுவாகும். உள்ளூராட்சி நூலகங் களை நிர்வகிக்கும் நூலகர்களுக்குத் தேவையான நூலக நிர்வாகம் தொடர்பான குறிப்புகள் இக்கைநூலில் வழங்கப்பட்டிருந்தன.

6.

**நூலக அபிவிருத்திக் கருத்தரங்கு, ஏப்ரல் 6-8, 1990: நுலகர்களுக்கான வழிகாட்டி.** என்.செல்வராஜா. கண்டி, தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகம்,30 புஷ்பதான மாவத்தை, 1 வது பதிப்பு, 1990.
60ப, கல்லச்சுப் பிரதி.

1990 ஏப்ரல் 6 முதல் 8 வரையான மூன்று தினங்கள், கண்டி - புஷ்பதான மாவத்தையில் உள்ள தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகத்தின் ஆதரவுடனும் மலையக வெளியீட்டகத்தின் இயக்குநர் அந்தனி ஜீவா, எழுத்தாளர் சாரல் நாடன் ஆகியோரின் அனுசரணையுடனும் செயலகப் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்ற தோட்டப் பிரதேச நூலகர்களுக்கான கருத்தரங்கின் போது வழங்கப்பட்ட கைநூல். தோட்டப் புறங்களில் வரைய றுக்கப்பட்ட நிதிவளத்துடன் நூலகங்களை நடத்தவேண்டிய தேவையுள்ள நூலக நிர்வாகிகளுக்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்ட இக்கைநூல், கிராமிய மட்டத்தில் செயற்படும் நூலகப் பொறுப்பாளர்களுக்குப் பயனளிக்கும் வகை யில் எளிமையான அடிப்படை நடைமுறைத் தகவல்களை கொண்டிருந்தது.



7.

**சனசமூக நிலையங்களுக்கான கைநூல்**: என்.செல்வராஜா. யாழ்ப்பாணம்: யாழ் மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனம், 23, சிவன் பண்ணை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1990.
60 ப, கல்லச்சுப்பிரதி.

யாழ்: மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சனசமூக நிலைய நூலகர்களுக்கான 6 நாள் பயிற்சியும் சான்றிதழ் வழங்கலும் ஐப்பசி 1989ல் யாழ்ப்பாணம் கொட்டடியில் அமைந்திருந்த சம்மேளனத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது. சம்மேளன அமைப்பாளர் திரு. இ.தவகோபால் அவர்கள் இணைப்பாளராகக் கடமையாற்றிய இக்கருத் தரங்கில் பங்கேற்றவர்களும், சம்மேளனத்துடன் இணைந்திருந்த 300க்கும் அதிகமான சனசமூக நிலைய நூலக நிர்வாகிகளுக்கும் இது விநியோகிக் கப்பட்டது. கிராமிய மட்டத்தில் செயற்படும் நூலகப் பொறுப்பாளர்களுக்குப் பயனளிக்கும் நூலக நிர்வாகத் தகவல்களை இக்கைநூல் கொண்டிருந்தது.

8.

**ஆரம்ப நூலகர் கைநூல்.** என்.செல்வராஜா. யாழ்ப்பாணம்: அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை. 1வது பதிப்பு செப்டெம்பர் 1991. (கொழும்பு: ராஜன் பிரிண்டர்ஸ்).
61 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு, 21x14 செ.மீ.

சிறு நூலகமொன்றின் செயற்பாடுகள் இந்நூலில் கோடிட்டுக் காட்டப்பட் டுள்ளன. நூலகத் துறையைத் தேர்ந்தெடுக்கும் ஒருவருக்கு நூலகமொன்றின் அன்றாட நடவடிக்கைகள் பற்றிய தெளிவையும், நிர்வாக அறிவுரைகளையும் வழங்கும் நூல். குடும்ப நூலகமொன்றினை நிர்வகிக்க விரும்புவோருக்கும் உதவும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

9.

**யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம் அயோத்தி நூலகசேவைகள், 1வது பதிப்பு ஜுன் 2001. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).
128 பக். புகைப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10.00, அளவு:27x21 செ.மீ.

ஜுன் 1, 1981ல் இலங்கை அரசபடையினரால் எரித்து அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாற்றைக் கூறக்கூடிய பத்திரிகைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள்., சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளங்கள் போன்றவற்றில் வெளியான தகவல்களையும், துண்டுப்பிரசுரங்கள், சிறுநூல்கள் போன்றவற்றையும் தொகுத்து ஆண்டுவாரியாக ஒழுங்கு செய்து, யாழ். நூலகத்துடன் தொடர்பு கொண்டவர்களின் கட்டுரைகளுடன் சேர்த்து புகைப்படங்களுடன் நூலுருவாக்கப்பட்டுள்ளது.




10.

நூல்தேட்டம் (தொகுதி 1): என். செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, ஜுன் 2002. (இலண்டன் :வாசன் அச்சகம், மிச்செம்).
xxiv, 332 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10, அளவு 21x14.5 செ.மீ. (ISBN 0-9549440-0-3)

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடனானதொரு நூல்விபரப்பட்டியல். முதற் தொகுதியில் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்பு முறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 001-1000 வரையில் தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பன நூலின் சிறப்பம்சமாகும்.



11.

மலேசியத் தமிழ் இலக்கியம்: தேசம் சிறப்பிதழ். என். செல்வராஜா, த.ஜெயபாலன் (தொகுப்பாசிரியர்கள்). ஐக்கிய இராச்சியம்: தேசம் வெளியீட்டகம், த.பெ.இல. 35806, இலண்டன் E 11 3JX, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (London: Setline Data Ltd).
48 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 3. புகைப்படங்கள். அளவு: 26.5x20 செ.மீ.

இலண்டனிலிருந்து வெளிவரும் தேசம் சஞ்சிகையின் வெளியீட்டாளரின் ஆதரவுடன் 05.04.2003 அன்று இலண்டன் Stratford Library Hall இல் மலேசிய தமிழ் இலக்கிய நிகழ்வும், மலேசிய தமிழ் நூல்கண் காட்சியும் இடம்பெற்றன. அத்தருணம் வெளியிடப்பட்ட தேசம் சிறப்பிதழ் இது. இவ்விதழில் மலேசிய இலக்கியம் பற்றிய ஈழத்து, மலேசிய எழுத்தாளர்களின் ஆக்கங்களும், கண்காட்சியில் வைக்கப்பட்ட 200க்கும் மேற்பட்ட மலேசிய சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றின் விபரங்கள் கொண்ட மலேசிய நூல்தேட்டம் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன.

12.

**Rising from the Ashes: Tragic episode of the Jaffna Library.**
N. Selvarajah. London, England: Thesam Publishers, P.O.Box 35806, E11 3JX, 1st edition June 2003, (London, England: Set Line Data Ltd, 61 Ewer Street, SEI ONR),
110p, maps, photos, 21x15 cm.

The Jaffna Public Library was burnt down in 1981, this publication gives a broad information on the library, its development, destruction, renovation and various personal thoughts and views pertaining to the library. Mr. Selvarajah, the compiler of this work is a well known librarian from SriLanka. He began his career in 1976 as a librarian at Ramanathan College. Since 1991 Mr. Selvarajah has been consultante to the Jaffna Public Library and co ordinating from the U. K.

13.

நூல்தேட்டம்: தொகுதி 2. என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, ஜுன் 2004. (கொழும்பு 6: Techno print).
xxiv, 462 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10, அளவு 21x14.5 செ.மீ. (ISBN 0-9549440-1-1)

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடனானதொரு நூல்விபரப்பட்டியல். இவ்விரண்டாம் தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்பு முறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 1001-2000 வரையில் தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும்.

14.
**நூல்தேட்டம்: தொகுதி 3.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு 12: Kumaran Press Private Limited, 361,1/2 Dam Street).
xxiv 522 பக்கம், விலை ஸ்டேர்லிங் பவுண் 10, அளவு: 21x14.5 செ.மீ. ISBN 0-9549440-2-x

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்தத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியல். இம்மூன்றாம் தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்பு முறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 2001-3000 வரையில் தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும்.

15
**நூல்தேட்டம்: தொகுதி 4.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 12: Kumaran Press Private Limited, 361,1/2 Dam Street).
xxiv 520 பக்கம், விலை ஸ்டேர்லிங் பவுண் 10, அளவு: 21x14.5 செ.மீ. ISBN 0-9549440-3-8



தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்தத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியல். இம்மூன்றாம் தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்பு முறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 3001-4000 வரையில் தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும்.

16.
**நூலியல் பதிவுகள்.** என்.செல்வராஜா. உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (உடத்தல வின்னை சிந்தனைவட்ட அச்சீட்டுப் பிரிவு, 14 உடத்தலவின்ன மடிகே).
103 பக்கம், விலை: ரூபா 200, ஸ்டேர்லிங் பவுண் 5, அளவு 20.5 x14.5 செ.மீ.

நூலியல், நூல் வெளியீட்டுத்துறை, நூலகவியல் துறையுடன் தொடர்பான பதினொரு கட்டுரைகளின் தொகுப்பு, இவை இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ஐ.பீ.ஸி. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலைக்கலசம் நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகி, பின்னர் தேசம் (லண்டன்), வடலி (லண்டன்), தமிழர் தகவல் (கனடா), மலேசியத் தமிழ் இலக்கியம் (தேசம் சிறப்பிதழ்), ஞானம் (கொழும்பு), பூபாள இராகங்கள் 2005 (லண்டன்), நமது இலக்கு (ஜேர்மனி) ஆகிய இதழ்களில் மீள்பிரசுரம் செய்யப்பட்டன. ISBN : 955-8913-28-6

17.
**வாய்மொழி மரபில் விடுகதைகள்.** என்.செல்வராஜா. உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, இணைந்து வெளியிடுவோர்: ஐக்கிய இராச்சியம் அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
76 பக்கம், விலை: ரூபா 140, ஸ்டேர்லிங் பவுண் 5, அளவு 21x15 செ.மீ. ISBN : 955-8913-37-5

ஈழத்தமிழரின் பாரம்பரியம் மிக்க வாய்மொழி இலக்கியங்களான விடுகதைகளை புகலிட வாழ்வியலில் உள்ள இளையோர் சுவைக்கவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் அறிந்து குழந்தைகளிடையே பரிமாறவும் உதவியாக லண்டனில் 'வடலி' என்ற மாதப் பத்திரிகையில் ஜூலை 2003 முதல் மே 2004 வரை தொடராக பதினொரு அங்கங்களில் வெளிவந்த கட்டுரைகளின் நூலுரு இதுவாகும். பின்னிணைப்பாக நாட்டார் இலக்கியங்கள் தொடர்பாக ஈழத்தில் வெளிவந்த 51 நூல்கள் பற்றிய குறிப்புரையுடன் கூடிய நூல்விபரப்பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது. இப்பதிவுகள் நூல்தேட்டம் முதல் மூன்று தொகுதிகளிலும் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டவை.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதற்தடவையாக இலங்கையில் வெளியான 150 சிறப்பு மலர்களின் தமிழ் ஆக்கங்களுக்கான வழிகாட்டியான 'சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி' எனும் இவரின் நூல் 2007 ஜனவரியில் சிந்தனை வட்டத்தின் 240வது வெளியீடாக வெளிவரவுள்ளது. இது இவரின் 18வது நூலாகும்.

யாழ்ப்பாணப் பொதுநூலக ஆலோசனைக்குழு உறுப்பினர், இலண்டன் தமிழர் தகவல் நிலைய நூலக சேவைகளின் ஆவணக் காப்பகப் பிரிவின் இயக்குநர், ஜேர்மனியிலுள்ள சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் சங்க ஆலோசகர், ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கக் காப்பாளர், அயோத்தி



*இலங்கையில் 'சிந்தனைவட்டம்' என். செல்வராஜா அவர்களுக்கு 'எழுத்தியல் வித்தகர்' பட்டம் வழங்கி கௌரவித்த போது...*



நூலக சேவையின் ஸ்தாபகர் - நிர்வாக இயக்குநர் எனும் பதவிகளை சமூகநோக்குடன் வகித்துவரும் செல்வராஜா அவர்கள் 'நூல்தேட்டம்' 5வது தொகுதியின் தொகுப்புப் பணியினையும், ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களைப் பட்டியலிடும் பணியினையும், மலேசிய எழுத்தாளர் சங்கத்துக்காக ''மலேசிய நூல்தேட்டம்'' ஒன்றினைத் தொகுத்து வெளியிடும் பணியினையும் தற்போது மேற்கொண்டு வருகின்றார்.

என். செல்வராஜா அவர்களின் இத்தகைய பணிகளைக் கருத்திற் கொண்டு, கனடாவில் 'தமிழர்தகவல்' சஞ்சிகை வெளியீட்டு நிறுவனம் 2004ம் ஆண்டுக்கான 'தமிழர் தகவல்' சிறப்பு விருதினையும், இலங்கையில் 'சிந்தனை வட்டம்' 2005-ம் ஆண்டில் 'எழுத்தியல் வித்தகர்' விருதினையும் வழங்கி கௌரவித்துள்ளது. தற்போது பிரித்தானியாவின் 'ROYAL MAIL தபால்துறையில் அந்நிய நாணயப் பிரிவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வரும் இவரின் முகவரி

**N. Selvarajah**
48, Hallwicks Rd,
LUTON, Bedford Shire,
LU 2 9 BH
UNITED KINGDOM
T.P. 0044 - 1582 703786
E. mail : selvan @ ntl world.com




**Few publications of Mr N. Selvarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. என். செல்வராஜா அவர்களின் நூலக சேவை, எழுத்துப்பணி, வெளியீட்டு நடவடிக்கை ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் 2004ம் ஆண்டுக்கான ''தமிழர் தகவல்'' சிறப்பு விருது செல்வராஜா அவர்களுக்கு கனடாவில் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் இங்கிலாந்திலுள்ள வழக்கறிஞரும், மூத்த ஒலிபரப்பாளருமான திரு. விமல் சொக்கநாதன் அவர்கள், கொழும்பு ''தினகரன்'' பிரதம ஆசிரியராயிருந்த திரு. சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக தங்கப் பதக்கமும் வழங்கி கௌரவித்தார்.



# Bibliography Entry Form

Provider:____________ Date:__________________ Class:____________

BIBLIOGRAPHICAL DATA SHEET
(நுல்விபரப்பட்டியல் பதிவுத்தாள்)

Title of Book:______________________________

Subtitle:______________________________

Author / Compiler:______________________________

Country: Publishers:______________________________

Edition, Year:____________ Previous Edition, Years:____________

(Country: Printer):______________________________

Prilim:__________ Text:__________ Illus:__________ Price:______

Size:_____x_____cm

ISBN:______________________________

Description (Overleaf):______________________________

______________________________

N.Selvarajah, 48, Hallwicks Road, Luton, LU2 9BH,United Kingdom

If you are unable to send me a copy of the book, please photocopy this form, fill in the necessary information and attach it to the copies of the preliminary pages of the book. Then post it to the above address for inclusion. - Selva



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1979 நவம்பர் முதல்
## 2007 பெப்ரவரி வரை

# புன்னியாமீனின் புத்தகங்கள்.

## சிறுகதைத் தொகுதிகள்.

1) தேவைகள்
1வது பதிப்பு : நவம்பர் 1979, *வெளியீடு :* KIWS - KATUGASTOTA

2) நிழலின் அருமை
1வது பதிப்பு : மார்ச் 1986, *வெளியீடு : தமிழ்மன்றம்*

3) கரு
1வது பதிப்பு : பெப்ரவரி 1990, *வெளியீடு : சிந்தனைவட்டம்*

4) அந்த நிலை
1வது பதிப்பு : ஜனவரி 1990, *வெளியீடு : சிந்தனைவட்டம்*

5) நெருடல்கள்
1வது பதிப்பு : பெப்ரவரி 1990, *வெளியீடு : சிந்தனைவட்டம்*

6) யாரோ எவரோ எம்மை ஆள...
1வது பதிப்பு : ஜுலை 1996, *வெளியீடு : குமரன் (இந்தியா)*

7) இனி இதற்குப் பிறகு....
1வது பதிப்பு : ஜுலை 2003, *வெளியீடு : சிந்தனைவட்டம்*
ISBN : 955-8913-03-0

## நாவல்.

8) அடிவானத்து ஒளிர்வுகள்.
1வது பதிப்பு : அக்டோபர் 1987, *வெளியீடு : அல் பாஸி பப்ளிகேஷன் (இந்தியா)*
2வது பதிப்பு : ஜுலை 2003 *வெளியீடு : சிந்தனைவட்டம்*
ISBN : 955-8913-00-0

## இலக்கியத் திறனாய்வுகள்.

9) இலக்கிய விருந்து.
1வது பதிப்பு : ஏப்ரல் 1987, *வெளியீடு : தமிழ்மன்றம்*

10) இலக்கிய உலா.
1வது பதிப்பு : மே 1987, *வெளியீடு : மில்லத் பப்ளிகேஷர்ஸ் (இந்தியா)*



## வரலாறு.

11) கிராமத்தில் ஒரு தீபம்.
1வது பதிப்பு : நவம்பர் 1988, *வெளியீடு : பொன் விழாக்குழு*

12) மர்ஹூம் எம்.வை. அப்துல் ஹமீட்.
1வது பதிப்பு : மார்ச் 2004, *வெளியீடு : சிந்தனைவட்டம்*

13) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 1
1வது பதிப்பு : அகஸ்ட் 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-14-6

14) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 2
1வது பதிப்பு : அகஸ்ட் 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-16-2

15) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 3
1வது பதிப்பு : செப்டம்பர் 2005, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-20-2

16) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 4
1வது பதிப்பு : நவம்பர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-55-3

17) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 5
1வது பதிப்பு : டிசம்பர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-63-4

18) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 6
1வது பதிப்பு : ஜனவரி 2007, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-64-2

19) இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 7
1வது பதிப்பு : பெப்ரவரி 2007, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-65-0

20) மத்திய மாகாண முஸ்லிம் கலாசார, கலைஞர்கள் கௌரவிப்பு விழா 1999,
1வது பதிப்பு : டிசம்பர் 1999,
*வெளியீடு : மத்திய மாகாண முஸ்லிம் கலாசார அமைச்சு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) 'நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி'
1வது பதிப்பு : பெப்ரவரி 2007, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 978-955-8913-68-0

## ஆசிய வரலாறு.

22) ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள்.
1வது பதிப்பு : நவம்பர் 2001, 2வதுபதிப்பு : மார்ச் 2002,
வெளியீடு : சிந்தனை வட்டம்

## விளையாட்டு விமர்சனம்.

23) Wills World Cup '96 நினைவுகள்.
1வது பதிப்பு : மார்ச் 1996, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

## கவிதை.

24) புதிய மொட்டுக்கள்.
1வது பதிப்பு : பெப்ரவரி 1990, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

25) அரும்புகள்.
1வது பதிப்பு : நவம்பர் 1990, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

26) பாலங்கள்.
1வது பதிப்பு : நவம்பர் 1996, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

## வரலாறும் சமூகக்கல்வியும்.

27) வரலாறு - குறிப்புகள் (ஆண்டு – 9)
1வது *பதிப்பு : அக்டோபர் 1991, வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

28) வரலாறு - குறிப்புகள் (ஆண்டு – 10)
1வது *பதிப்பு : அக்டோபர் 1991, வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

29) வரலாறு - குறிப்புகள் (ஆண்டு – 11)
1வது *பதிப்பு : அக்டோபர் 1991, வெளியீடு : சிந்தனை வட்டம்*

30) சமூகக் கல்வி குறிப்புகள் (தொகுதி – 1)
1வது *பதிப்பு : அக்டோபர் 1993, வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

31) சமூகக் கல்வி குறிப்புகள் (தொகுதி – 2)
1வது *பதிப்பு : நவம்பர் 1993, வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

32) வரலாறு (ஆண்டு – 9) வினா - விடைத் தொகுதி
1வது பதிப்பு : நவம்பர் 1991, 7வது பதிப்பு : ஜனவரி 1998
*வெளியீடு : சிந்தனை வட்டம்*



33) வரலாறு (ஆண்டு – 10) வினா - விடைத் தொகுதி
1வது பதிப்பு : நவம்பர் 1991, 8வது பதிப்பு : பெப்ரவரி 1998
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

34) வரலாறு (ஆண்டு – 11) வினா - விடைத் தொகுதி
1வது பதிப்பு : அக்டோபர் 1991, 8வது பதிப்பு : ஜனவரி 1998
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

## அரசியல் திறனாய்வுகள்.

35) இலங்கையின் தேர்தல்கள் (அன்றும், இன்றும்)
1வது பதிப்பு : ஆகஸ்ட் 1994, *வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

36) 94 பொதுத் தேர்தலும், சிறுபான்மை இனங்களும்
1வது பதிப்பு : நவம்பர் 1994, 2வது பதிப்பு : ஜனவரி 1995
*வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

37) 94 சனாதிபதி தேர்தலும், சிறுபான்மை இனங்களும்
1வது பதிப்பு : நவம்பர் 1994, 2வது பதிப்பு : ஜனவரி 1995
*வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

38) 21ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்
1வது பதிப்பு : ஜனவரி 2000, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

39) 2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலும், சிறுபான்மை சமுகத்தினரும்
1வது பதிப்பு : நவம்பர் 2000, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

40) சிறுபான்மை பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம்
1வது பதிப்பு : ஜனவரி 2002, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

41) மத்திய மாகாண சபையின் முஸ்லிம் அமைச்சுப் பதவிக்கு சாவுமணி.
1வது பதிப்பு : ஜூன் 2002
*வெளியீடு : மத்திய இலங்கை பட்டதாரிகள் ஒன்றியம்*

## அரசறிவியல் நூல்கள்.

42) அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 1)
1வது பதிப்பு : ஆகஸ்ட் 1990, *வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

43) அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 2)
1வது பதிப்பு : செப்டம்பர் 1990, *வெளியீடு :* E.P.I *புத்தகாலயம்*

44) அரசறிவியல் கோட்பாடுகள்.
1வது பதிப்பு : நவம்பர் 1992,
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

45) இலங்கையின் அரசியல் நிகழ்கால நிகழ்வுகள் 1995
1வது பதிப்பு : மே 1995,
*வெளியீடு : சிந்தனை வட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46) பிரித்தானியாவின் அரசியல் முறை
1வது பதிப்பு : ஜனவரி 1988, 7வது பதிப்பு: பெப்ரவரி 1997
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

47) அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும்
**Political Science Supplimentary Series – 01**
1 வது பதிப்பு : ஜனவரி 1992, 7வது பதிப்பு : பெப்ரவரி 1997
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

48 இலங்கையில் அரசியல் திட்ட வளர்ச்சி
**Political Science Supplimentary Series – 02**
1வது பதிப்பு : மே 1993, 7வது பதிப்பு : ஜனவரி 1998
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

49) தெரிவு செய்யப்பட்ட நாடுகள்
**Political Science Supplimentary Series – 03**
1வது பதிப்பு : ஜனவரி 1993, 6வது பதிப்பு : ஒக்டோபர் 1997
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

50 உள்ளூராட்சி முறையும், கட்சி முறையும், வெளிநாட்டுக் கொள்கைகளும்
**Political Science Supplimentary Series – 04**
1வது பதிப்பு : ஜனவரி 1991, 6வது பதிப்பு : பெப்ரவரி 1997
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

51) பல்தேர்வு மாதிரி வினா – விடைத் தொகுதி 1
1வது பதிப்பு : நவம்பர் 1997, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

52) பரீட்சை மாதிரி வினா – விடை
1வது பதிப்பு : பெப்ரவரி 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

53) **B.A** அரசறிவியல் (பொதுக் கலைத்தேர்வு)
1வது பதிப்பு : ஜனவரி 1999, *வெளியீடு* : E.P.I *புத்தகாலயம்*

54) **G.A.Q.** அரசறிவியல் (முதல் கலைத்தேர்வு)
1வது பதிப்பு : ஜனவரி 1999, *வெளியீடு* : E.P.I *புத்தகாலயம்*

55) அரசறிவியல்
1வது பதிப்பு : நவம்பர் 2003, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

## பொது அறிவு நூல்கள்.

56) பொது அறிவுச்சரம் (தொகுதி -1)
1வது பதிப்பு : செப்டெம்பர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-50-2

57) பொது அறிவுச்சரம் (தொகுதி -2)
1வது பதிப்பு : செப்டெம்பர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-51-0

58) பொது அறிவுச்சரம் (தொகுதி -3)
1வது பதிப்பு : செப்டெம்பர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-52-9



59) **பொது அறிவுச்சரம் (தொகுதி -4)**
1வது பதிப்பு : ஒக்டோபர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-53-7

60) **பொது அறிவுச்சரம் (தொகுதி -5)**
1வது பதிப்பு : ஒக்டோபர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-56-1

61) **பொது அறிவுச்சரம் (தொகுதி -6)**
1வது பதிப்பு : ஒக்டோபர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-57-x

62) **பொது அறிவு நிகழ்காலத் தகவல் துளிகள் (தொகுதி 1)**
1வது பதிப்பு : ஒக்டோபர் 2006, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN : 955-8913-58-8

## தனது மனைவி மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து புன்னியாமீன் எழுதிய புலமைப்பரிசில் நூல்கள்

63) **அறிமுகத் தமிழ்**
1வது பதிப்பு : பெப்ரவரி 1997, 9வது பதிப்பு : ஏப்ரல் 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

64) **புலமைப்பரிசில் மாதிரி வினாவிடைகள் (தொகுதி 1)**
1வது பதிப்பு : ஏப்ரல் 1997, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

65) **புலமைப்பரிசில் மாதிரி வினா விடைகள் (தொகுதி 2)**
1வது பதிப்பு : மே - 1997, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

66) **அறிமுக கணிதம்**
1வது பதிப்பு : மே - 1997, 9வது பதிப்பு : ஏப்ரல் - 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

67) **சுற்றாடலும், பொது அறிவும்**
1வது பதிப்பு : ஜூன் - 1997, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

68) **அறிமுக விஞ்ஞானமும், ஆங்கிலமும்**
1வது பதிப்பு : ஜூலை - 1997, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

69) **அறிமுக விஞ்ஞானம் (தொகுதி 1)**
1வது பதிப்பு : பெப்ரவரி - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

70) **அறிமுக விஞ்ஞானம் (தொகுதி 2)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

71) **நாமும் சுற்றாடலும் (தொகுதி 1)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, 2வது பதிப்பு : பெப்ரவரி - 1999
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

72 **நாமும் சுற்றாடலும் (தொகுதி 2)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

73) **புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி 1)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74) **புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி 2)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

75) **புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி (தொகுதி 3)**
1வது பதிப்பு : மார்ச் - 1998, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

76 **புலமைப்பரிசில் முன்னோடி வழிகாட்டி**
1வது பதிப்பு : நவம்பர் 1998, 3வது பதிப்பு : அக்டோபர் - 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

77) **புலமைப்பரிசில் வழிகாட்டிக் களஞ்சியம்**
1வது பதிப்பு : ஜனவரி - 1999, 3வது பதிப்பு : அக்டோபர் - 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

78) **புலமைப்பரிசில் அறிவு ஒளி (தொகுதி 1)**
1வது பதிப்பு : மார்ச் - 1999, 3வது பதிப்பு : செப்டெம்பர் - 2000
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

79) **புலமைப்பரிசில் ஆரம்ப வழிகாட்டி**
1வது பதிப்பு : ஜனவரி - 2000, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

80) **புலமைப்பரிசில் அறிவு ஒளி (தொகுதி 2)**
1வது பதிப்பு : மார்ச் - 2000, 2வது பதிப்பு : செப்டெம்பர் - 2000
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

81) **புலமைப்பரிசில் அறிவு ஒளி (தொகுதி 3)**
1வது பதிப்பு : மார்ச் - 2000, 2வது பதிப்பு : செப்டெம்பர் - 2000
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

82) **புலமைப்பரிசில் வெற்றி ஒளி (2000)**
1வது பதிப்பு : ஆகஸ்ட் - 2000, 2வது பதிப்பு : நவம்பர் - 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

83 **புலமைப்பரிசில் அறிவு ஒளி (தொகுதி 4)**
1வது பதிப்பு : ஆகஸ்ட் - 2000, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

84) **புலமைப்பரிசில் சுடர் ஒளி**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2001, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

85) **2002 புலமைப்பரிசில் புலமை ஒளி**
1வது பதிப்பு : அக்டோபர் - 2001, 2வது பதிப்பு : மார்ச் - 2002
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

86) **2002 புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி**
1வது பதிப்பு : நவம்பர் - 2001, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

87) **2002 புலமைப்பரிசில் விவேகச் சுரங்கம்**
1வது பதிப்பு : டிசம்பர் - 2001
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

88) **மாதிரிக் கட்டுரைகள் (தரம்5)**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2002, 7வது பதிப்பு : மே - 2005
*வெளியீடு : சிந்தனை வட்டம்*



89) **2003 புலமைப்பரிசில் விவேகக் களஞ்சியம்**
1வது பதிப்பு : நவம்பர் - 2002, 7வது பதிப்பு : மார்ச் - 2004
*வெளியீடு : சிந்தனை வட்டம்*

90) **2003 புலமைப்பரிசில் மாதிரி வினா விடை**
1வது பதிப்பு : ஜனவரி - 2003, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

91) **புலமைச்சுடர்**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2003, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

92) **2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1)**
1வது பதிப்பு : மார்ச் - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-09-x

93) **2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2)**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-10-3

94) **2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 3)**
1வது பதிப்பு : மே - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-11-1

95) **2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 4)**
1வது பதிப்பு : மே - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-12-x

96) **புலமைச் சுடர் (தொகுதி 2)**
1வது பதிப்பு : ஜூலை - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*

97) **2005 புலமைப்பரிசில் புலமைத்தீபம்**
1வது பதிப்பு : செப்டெம்பர் - 2004, 4வது பதிப்பு : செப்டெம்பர் - 2006
*வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-17-0

98) **தரம் 4 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி**
1வது பதிப்பு : அக்டோபர் - 2004, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-19-7

99) **2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1)**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2005, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-20-0

100 **2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2)**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2005, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-21-9

101) **2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 3)**
1வது பதிப்பு : ஏப்ரல் - 2005, *வெளியீடு : சிந்தனை வட்டம்*
ISBN 955-8913-22-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102) **2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 4)**
1ஆம் பதிப்பு : ஏப்ரல் - 2005, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-23-5

103) **புலமைச் சுடர் 03**
1ஆம் பதிப்பு : ஜுலை - 2005, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-24-3

104) **தரம் 4 புலமை விருட்சம்**
1ஆம் பதிப்பு : செப்டெம்பர் - 2005, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-27-8

105) **2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1)**
1ஆம் பதிப்பு : பெப்ரவரி - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-31-6

106) **2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2)**
1ஆம் பதிப்பு : ஏப்ரல் - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-32-4

107) **2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 3)**
1ஆம் பதிப்பு : மே - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-33-2

108) **2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 4)**
1ஆம் பதிப்பு : மே - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-34-0

109) **2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1)**
1ஆம் பதிப்பு : நவம்பர் - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-42-1

110) **2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2)**
1ஆம் பதிப்பு : நவம்பர் - 2006, வெளியீடு : சிந்தனை வட்டம்
ISBN 955-8913-43-x



இலங்கை எழுத்தாளர்கள்,
ஊடகவியலாளர்கள், கலைஞர்களின்
விபரங்கள் திரட்டப்பட்டு தொடராக
ஆவணப்படுத்தப்பட்டு வருவது

# இலங்கை இலக்கிய

# வரலாற்றில் முதற் தடவையாகும்.

**அனைவரையும் அணைத்துச் செல்லும் ஆக்க இதழான 'நவமணி'யின் அனுசரணையுடன் 'நாளைய சந்ததியின் இன்றைய சக்தி' சிந்தனைவட்டம் இதுவரை**
இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள்,
கலைஞர்களின் விபரத்திரட்டு
**ஏழு தொகுதிகளை வெளியிட்டுள்ளது.**



தொகுதி 1
200/-
ISBN : 955-8913-14--6



தொகுதி 2
200/-
ISBN : 955-8913-16-2



தொகுதி 3
200/-
ISBN : 955-8913-20-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுதி 4
260/-
ISBN : 955-8913-55-3



தொகுதி 5
200/-
ISBN : 955-8913-63-4



தொகுதி 6
160/-
ISBN : 955-8913-64-2



தொகுதி 7
210/-
ISBN : 955-8913-65-0

இந்நூல் வெளியீட்டுத் தொடரில் இலங்கைவாழ், மற்றும் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

P.M. Puniyameen
14, Udatalawinna Madige,
Udatalawinna - 20802 SriLanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர்...

உடத்தலவின்ன, சிந்தனை வட்டத்தின் தாபகரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் இன்று 240க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டு மலையகத்தில் முன்னணிப் பதிப்பாளராகத் திகழ்கின்றார். நூல்களை வெளியிடுவதுடன் மாத்திரம் தனது பணியினைச் சுருக்கிக் கொள்ளாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தமிழ் வளர்க்கும் மூத்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் நிறுவனரீதியில் பாராட்டி கௌரவித்து வருவது புன்னியாமின் அவர்களின் விசேடமான ஒரு குணாம்சமாகும்.

கடந்த 32 வருடகால இலக்கியப்பணியுடன் 17 வருடகால பிரசுரப்பணியும் ஆற்றிவரும் பீ.எம்.புன்னியாமீன், 1995இல் மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் கௌரவ வி.புத்திரசிகாமணி அவர்களினால் ஹட்டனில் நடத்தப்பட்ட மத்திய மாகாண சாகித்திய விழாவில் விருதும், பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1999இல் மலையக கலை கலாசார சங்கம் 1999இல் நடத்திய 'ரத்னதீப' விருது வழங்கும் வைபவத்தில் இலக்கியப்பணிக்காக அப்போதைய முதலமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்காவினால் ?ரத்னதீப? சிறப்புவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2003இல் இவரது தொடர்ந்த கலை இலக்கியப் பணிக்கான கலாபூஷணம் விருதும் வழங்கி அரசினால் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-8913-68-0